**வள்ளுவன் தமிழ் மையம்**
***Valluvan Tamil Academy***

# திருக்குறள் போட்டி விதிமுறைகள் - 2025-2026
**Thirukkural Competition Guidelines – 2025-2026**

---

திருக்குறள் போட்டியின் முக்கிய குறிக்கோள் - வள்ளுவத்தை நம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவது மற்றும் அதில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களையும் மிக உயரிய சிந்தனைகளையும் நமது மாணவர்களின் ஆழ்மனதில் பதியவைப்பதற்கும் ஆகும்.

இந்தப் போட்டியில் பங்குபெற தற்சமயம் நிலை 3 முதல் நிலை 9 வரையில் உள்ள அனைத்து மாணவர்களும் தகுதி பெறுவர்.

**பொதுவான விதிமுறைகள்:**

- போட்டிகள் நிலை வாரியாக நடத்தப்படும். தங்களுது நிலைக்கான விதிமுறைகளைத் தெரிந்து கொள்ளவும்.
- நிலை 3 & 4 - மொத்தம் இரண்டு சுற்றுக்கள் கொடுக்கப்படும். இதில் எதுவும் நீக்குதல் சுற்று கிடையாது. சமநிலை ஏற்படும் பட்சத்தில் சமநிலை முறிவு சுற்றுக்கு உட்படுத்தப்படுவர். அப்பொழுது, கட்டாயம் படிக்க வேண்டிய அதிகாரத்தில் ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும்.
- நிலை 5 & 6 - மொத்தம் மூன்று சுற்றுக்கள் கொடுக்கப்படும். இதில் எதுவும் நீக்குதல் சுற்று கிடையாது. சமநிலை ஏற்படும் பட்சத்தில் சமநிலை முறிவு சுற்றுக்கு உட்படுத்தப்படுவர். இச்சுற்றில் மனப்பாடம் செய்யவேண்டிய இரண்டு அதிகாரங்களில், நடுவர்கள் சொல்லும் அதிகாரத்தில் இருந்து ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும்.
- நிலை 7, 8, & 9 - மொத்தம் மூன்று சுற்றுக்கள் கொடுக்கப்படும். இதில் எதுவும் நீக்குதல் சுற்று கிடையாது. சமநிலை ஏற்படும் பட்சத்தில் சமநிலை முறிவு சுற்றுக்கு உட்படுத்தப்படுவர். இச்சுற்றில் சமநிலை சுற்றுக்கான அதிகாரத்தில் இருந்து ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும்.
- போட்டியாளர்கள் அவர்களுக்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு முழுமையாகவும் தெளிவாகவும் பதில் கூற வேண்டும்.
- தேவைப்படும் போது சமநிலை உடைப்பு சுற்றிற்கும் போட்டியாளர்கள் உட்படுத்தப்படுவார்கள்.
- போட்டியில் வெற்றிபெற கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட திருக்குறளை மனப்படமாக மற்றும் பொருளுணர்ந்து படித்தல் அவசியம்.
- அனைத்து சுற்றுக்கள் முடிந்த பின் அதிகம் புள்ளிகள் எடுத்த மாணவர்கள் வெற்றியாளர்களாக கருதப்படுவார்கள்.

# வள்ளுவன் தமிழ் மையம்
## *Valluvan Tamil Academy*

### திருக்குறள் போட்டி விதிமுறைகள் - 2025-2026
**Thirukkural Competition Guidelines – 2025-2026**

---

## <u>நிலை, சுற்று மற்றும் திருக்குறள் அதிகாரங்கள் பட்டியல்</u>

| நிலை | சுற்றுகள் | கட்டாயம் படிக்க வேண்டிய திருக்குறள் அதிகாரம் | சமநிலை முறிவுக்கான திருக்குறள் அதிகாரம் |
|---|---|---|---|
| *நிலை 3* | *2* | புறங்கூறாமை *(19)* | புறங்கூறாமை *(19)* |
| *நிலை 4* | *2* | தவம் *(27)* | தவம் *(27)* |
| *நிலை 5* | *3* | தீவினை அச்சம் *(21)*<br>காலம் அறிதல் *(49)* | தீவினை அச்சம் *(21)*<br>காலம் அறிதல் *(49)* |
| *நிலை 6* | *3* | சொல்வன்மை *(65)*<br>குடிமை *(96)* | சொல்வன்மை *(65)*<br>குடிமை *(96)* |
| *நிலை 7* | *3* | கூடா ஒழுக்கம் *(28)*<br>நாடு *(74)* | வாய்மை *(30)* |
| *நிலை 8* | *3* | நட்பாராய்தல் *(80)*<br>சான்றாண்மை *(99)* | குற்றம் கடிதல் *(44)* |
| *நிலை 9* | *3* | அவை அஞ்சாமை*(73)*<br>குடி செயல்வகை *(103)* | பெரியாரைத் துணைக்கோடல் *(45)* |

**<u>நிலை 3 & 4:</u>**

| சுற்றுகள் | விளக்கம் | நேரம் |
|---|---|---|
| *சுற்று 1* | மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரத்தில் உள்ள அனைத்து குறள்களும் கூற வேண்டும். | *2 நிமிடம்* |
| *சுற்று 2* | ஒரு திருக்குறளின் தொடக்கம் அல்லது இறுதியினை கொடுத்தால் அந்த திருக்குறளை முழுமையாக பொருளுடன் கூற வேண்டும். | *1 நிமிடம்* |
| சமநிலை முறிவு *(Optional)* | கட்டாயம் மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரத்தில் ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும். | *1 நிமிடம்* |

# வள்ளுவன் தமிழ் மையம்
## *Valluvan Tamil Academy*

## திருக்குறள் போட்டி விதிமுறைகள் - 2025-2026
**Thirukkural Competition Guidelines – 2025-2026**

---

**நிலை 5 & 6:**

| சுற்றுகள் | விளக்கம் | நேரம் |
|---|---|---|
| *சுற்று 1* | *மனப்பாடம் செய்யவேண்டிய இரண்டு அதிகாரங்களில், நடுவர்கள் சொல்லும் ஒரு அதிகாரத்தில் உள்ள அனைத்து குறள்களும் கூற வேண்டும்.* | *2 நிமிடம்* |
| *சுற்று 2* | *ஒரு திருக்குறளின் தொடக்கம் அல்லது இறுதியினை கொடுத்தால் அந்த திருக்குறளை முழுமையாக பொருளுடன் கூற வேண்டும்.* | *1 நிமிடம்* |
| *சுற்று 3* | *கொடுக்கப்படும் திருக்குறளில் உள்ள வார்த்தைகளில் நடுவர்கள் கேட்கும் வார்த்தைக்கு பொருள் கூற வேண்டும்* | *1 நிமிடம்* |
| சமநிலை முறிவு *(Optional)* | *கட்டாயம் மனப்பாடம் செய்யவேண்டிய இரண்டு அதிகாரங்களில், நடுவர்கள் சொல்லும் அதிகாரத்தில் இருந்து ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும்.* | *1 நிமிடம்* |

**நிலை 7, 8 & 9:**

| சுற்றுகள் | விளக்கம் | நேரம் |
|---|---|---|
| *சுற்று 1* | *மனப்பாடம் செய்யவேண்டிய இரண்டு அதிகாரங்களில், நடுவர்கள் சொல்லும் ஒரு அதிகாரத்தில் உள்ள அனைத்து குறள்களும் கூற வேண்டும். ஏதேனும் 5 குறள்களுக்கு மட்டும் பொருள் கூறினால் போதுமானது.* | *2 நிமிடம்* |
| *சுற்று 2* | *ஒரு திருக்குறளின் தொடக்கம் அல்லது இறுதியினை கொடுத்தால் அந்த திருக்குறளை முழுமையாக பொருளுடன் கூற வேண்டும்.* | *1 நிமிடம்* |
| *சுற்று 3* | *கொடுக்கப்படும் திருக்குறளில் உள்ள வார்த்தைகளில் நடுவர்கள் கேட்கும் வார்த்தைக்கு பொருள் கூற வேண்டும்* | *1 நிமிடம்* |
| சமநிலை முறிவு *(Optional)* | **சமநிலை முறிவுக்காக** கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தில், ஏதேனும் ஒரு குறளை எடுத்துக்காட்டுடன் கதை வடிவில் கூற வேண்டும். | *1 நிமிடம்* |